மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்தின் மேல் மலைப் பகுதிகளாக இருக்கின்ற மன்னவனூர் ஊராட்சி, பூண்டி ஊராட்சி, கூக்கால் ஊராட்சி ஆகிய பகுதிகளில் மின் பற்றாக்குறை தொடர்ந்து நிலவி வருகின்றது. குறிப்பாக, கூக்கால் ஊராட்சியில் வாழநேசம் சத்தியக்கரை என்கின்ற பகுதியில் ஒரு புதிய மின் மாற்றியினை அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பகுதி கொடைக்கானல் மலைப் பகுதியாக இருக்கிறது. அப்பகுதியில் மின் பற்றாக்குறை என்பது கிடையாது; மின் அழுத்தம் குறைவாக இருந்திருக்கலாம். அதற்காகத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்மாற்றியை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறார். உடனடியாக அது ஆய்வு செய்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம், மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

இரயில்வே மேம்பாலம்

***547—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2017 ஜூன் 14]

(அ) வில்லிவாக்கம் தொகுதி, வில்லிவாக்கம் G.K.M. காலனி–பட்டமேடு இரயில்வே கடவுப் பாதை–1–ல் மேம்பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வில்லிவாக்கம் தொகுதி, வில்லிவாக்கம் ஜிகேஎம் காலனி, பட்டமேடு இரயில்வே கடவுப் பாதை 1–ல் மேம்பாலம் அமைக்க வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு, சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தினால் சரிபார்க்கப்பட்டு, 68 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பாலம் அமைப்பதற்குத் தேவையான நிலம் தொடர்பாக ஐ.சி.எப். நிறுவனத்தின் அனுமதியைப் பெற்றவுடன், பெருநகர சென்னை மாநகராட்சியினுடைய அனுமதியினைப் பெற்று, நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2011 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்கள் 5–வது முறையாக முதலமைச்சராக இருந்தார். இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், அப்போது துணை முதலமைச்சராகவும், அதேநேரத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் பொறுப்பு வகித்திருந்தார். அப்போது, இரண்டு பாலங்கள்; சென்னை சென்ட்ரலில் தொடங்கி வில்லிவாக்கம் வரை இரண்டு கடவுப் பாதைகள், அதாவது L–1, L–2 என இரண்டு பாதைகளில், ஒரு பகுதி வில்லிவாக்கம் பகுதியினைச் சார்ந்தது. மற்றொரு பகுதி கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியினைச் சார்ந்ததாகும். அங்கு இரண்டு மேம்பாலங்கள் அல்லது சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கையாகும். அந்தக் கோரிக்கையினை அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்று, இரண்டு பாலங்களையும் கட்டுவதற்கு

அறிவித்தார்கள். அந்த இரண்டு பாலங்களையும் ஒன்றாகக் கட்டினால், பொது மக்கள் போக்குவரத்திற்கு சிரமம் ஏற்படும் என்கின்ற காரணத்தினால், ஒரு பாலத்தின் பணியினை முதலில் துவக்குவோம் என்று துவங்கி, ஒன்றாவது பாலத்தினை, அதாவது L–1–ஐப் பிறகு செய்வோம் என்று நிறுத்திவிட்டார்கள்.

முற்பகல் 10–25

அப்படி நிறுத்திவைக்கப்பட்டு நிலுவையிலுள்ள அந்தப் பாலத்தை மீண்டும் கட்ட வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் 2011–லிருந்து உங்கள் கட்சிதான் ஆட்சியில் இருக்கின்றது. இது மக்களுடைய பிரச்சினை. அன்றாடம் போக்குவரத்திற்கு மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஒன்றாவது கடவுப் பாதை கொளத்தூர் பகுதியிலுள்ள பல்வேறு புதிய குடியிருப்புகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கேள்வியை முடிவிற்கு கொண்டு வாருங்கள். உங்களுக்கு துணைக் கேள்வி கேட்க இன்னொரு வாய்ப்பிருக்கிறது.

திரு. ப. ரங்கநாதன்: தலைவர் அவர்களே, கேள்விதான். நான் எழுதி வைத்துப் படிக்கவில்லை. கேள்விதான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைத்தான் சீக்கிரம் முடியுங்கள். உங்களுக்கு இன்னும் ஒரு துணைக் கேள்வி கேட்க வாய்ப்பிருக்கிறது.

திரு. ப. ரங்கநாதன்: நீங்கள் அவசரப்படாதீர்கள்; கொஞ்சம் time கொடுங்கள். அந்தப் பகுதியில் பல குடியிருப்புகள் இருக்கின்ற காரணத்தினால், இந்தப் பகுதிக்கு வர வேண்டுமென்றால் சிரமம் ஏற்படுகிறது. அந்த நெருக்கடியைப் போக்குவதற்காக உரிய நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். தாங்கள்தான் அவருக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். இந்த இரயில்வே கடவுப் பாதை 1–ல் மேம்பாலத்தைக் கட்டுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். எப்பொழுது அந்தப் பணி தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு இருக்கிற சூழ்நிலை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். வில்லிவாக்கம் தொகுதி, வில்லிவாக்கம் G.K.M. காலனி—பட்டேடு இரயில் பாதையில் மேம்பாலம் அமைப்பதற்கான வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு, சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தால் சரிபார்க்கப்பட்டு, 68 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டில் பாலத்திற்குத் தேவையான தனியார் நிலம் கையகப்படுத்த தேவையான நிதி 34 கோடியே 10 இலட்சம் ரூபாய். இதில் I.C.F. நிறுவனத்தின் 1,230 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலத்தை 35 வருட கால குத்தகைக்கு எடுக்கும் தொகையும் அடங்கும். இப்பாலம் அமைப்பதற்குத் தேவையான 1,230 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் சம்பந்தமாக I.C.F. நிறுவனத்திடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. மேற்கூறிய நிலத்திற்கு 35 வருட கால குத்தகைத் தொகையாக 4 கோடியே 56 இலட்சம் ரூபாயும், அந்நிறுவனத்தின் சுற்றுச்சுவரை இடித்துவிட்டு மீண்டும் கட்டுவதற்கு 800 சதுர மீட்டர் பரப்பளவுள்ள கட்டடத்தை இடித்துவிட்டு புதியதாய் கட்டுவதற்கும், சுற்றுச்சுவர் அருகே உள் வட்டச் சாலை அமைப்பதற்கும், 6 கோடியே 19 இலட்சம் ரூபாயும், மொத்தம் 10 கோடியே 75 இலட்சம் ரூபாய் தொகையினை செலுத்துமாறு I.C.F. நிறுவனம் பெருநகர சென்னை மாநகராட்சியைக் கேட்டுக்கொண்டுள்ளது. இருப்பினும் இரயில்வே பகுதியில் இரயில்வே துறையின் மூலமாக பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பாலம் அமைப்பதற்குத் தேவையான நிலம் தொடர்பாக I.C.F. நிறுவனம் மற்றும் தனியார் நில உரிமையாளர் ஒப்புதல் பெற்றவுடன், இத்திட்டத்திற்குத் தேவையான நிதியினை ஆசிய வளர்ச்சி வங்கியின்மூலம் பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள்.*

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் G.K.M. காலனி–பட்டேடு இரயில்வே கடவுப் பாதை–1 என்பது ஒரு பக்கத்தில் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்கும், ஒரு பக்கம் கொளத்தூர் தொகுதிக்கும் உட்பட்ட மிக அவசியமான பாதை. நான் இதை மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்துவதற்குக் காரணம் என்னவென்றால், சர்வசாதாரணமாக இங்கே விபத்துகள் நடப்பதால் ஆண்டுதோறும் பல்வேறு உயிரிழப்புகள் ஏற்படுவதோடு, உடல் ஊனமுற்ற நிலை, கை, கால் இழப்பது எல்லாம் ஏற்படுகிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு மிக, மிக துரிதமாக நடவடிக்கை எடுத்து, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் ** பற்றி கூறியது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இப்படியெல்லாம் பேசக் கூடாது. கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. ப. ரங்கநாதன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் வேண்டாம். நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.

திரு. ப. ரங்கநாதன்: ** பரவாயில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையின் மூலமாகத் துரிதமாக நடவடிக்கை எடுத்து, இந்தப் பாலத்தைக் கட்ட வேண்டும். அதேபோன்று, சென்னை பெருநகர மாநகராட்சிப் பகுதியில் மிகப் பெரிய அளவில் நெருக்கடியாக, மக்கள்தொகை அதிகமாக உள்ள பகுதிகளில், குறிப்பாக சென்ட்ரல்–திருவள்ளூர், சென்ட்ரல்–எண்ணூர்–திருவொற்றியூர், சென்ட்ரல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கெல்லாம் நீங்கள் தனிக் கேள்வி போடுங்கள்.

திரு. ப. ரங்கநாதன்: அதை ஒட்டிய பகுதி. இரயில்வே கடவுப் பாதை பற்றித்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்பதென்றால் நிறைய கேட்கலாம். மூலக் கேள்வியையொட்டி கேள்வியைக் கேளுங்கள். வில்லிவாக்கம் பற்றி மட்டும் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2017 ஜூன் 14]

முற்பகல் 10–30

திரு. ப. ரங்கநாதன்: இரயில்வே கடவுப் பாதை பணிகளைப் பற்றித்தான் நான் கேட்கிறேனேயொழிய, மற்ற துறைகளைப் பற்றியோ, மாநகராட்சியைப் பற்றியோ, குடிநீர் ஆதாரத்தைப் பற்றியோ எந்தக் கேள்வியும் நான் கேட்கமாட்டேன். இந்தப் பணிகளைப் பற்றித்தான் கேட்கிறேன். ஆக, சென்னைப் பெருநகர மாநகராட்சிப் பகுதிகளில் இதுபோன்ற இரயில்வே கடவுப் பாதைகளில் எல்லாம் மிக விரைவில் பணிகளைத் துவக்கி, மேம்பாலமோ அல்லது சுரங்கப் பாதைகளையோ கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அன்போடு கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.சி.எஃப். நிறுவனம் மத்திய அரசினுடைய, இரயில்வே துறையைச் சார்ந்த ஒரு நிறுவனம் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அது இரயில் பெட்டி தயாரிக்கக்கூடிய ஒரு தொழிற்சாலையாகும். இதிலே, தனியார் நிலத்தைக் கையகப்படுத்த வேண்டிய பிரச்சினைகளும் இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கண்டிப்பாக அதனைச் சரி செய்து, கூடிய விரைவில் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், மற்ற மேம்பாலங்களைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எண்ணூர் மேம்பாலம் 117 கோடி ரூபாயில் அமைக்க விதி 110–ன்கீழ் அறிவித்திருந்தார்கள். அந்த வேலைகள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. வேறொரு மேம்பாலத்தைப் பற்றியும் அவர் சொன்னார். அவசியம் இருப்பின், கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம்–G.K.M. காலனி பட்டேடு இரயில்வே கடவுப் பாதை குறித்து ஏற்கெனவே எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் கேள்வி கேட்டு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களை எல்லாம் தந்திருக்கிறார்கள். இந்த இரயில்வே கடவுப் பாதையைப் பொறுத்தவரையில், இதிலே கொளத்தூர் தொகுதியும் சம்பந்தப்பட்டிருக்கிறது, ஏற்கெனவே நான் அந்தப் பகுதிக்கு மூன்று மற்றும் நான்கு முறை சென்று, நேரடியாக ஆய்வுப் பணிகளை மேற்கொண்டேன். அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களிடம் இது தொடர்பான கோரிக்கை மனுக்களையெல்லாம் பெற்று, மத்தியில் இருக்கக்கூடிய இரயில்வே துறை அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு கடிதத்தையும் 16–1–2015 அன்று அனுப்பியிருக்கிறேன். அவர்களுக்கு அந்தக் கடிதம் கிடைத்த ஐந்து நாட்களுக்குப் பிறகு, 23–1–2015 அன்று எனக்கு பதில் கடிதம் வந்தது. "உங்களுடைய கடிதம் கிடைக்கப்பெற்றது; விரைவில் அதற்குரிய நடவடிக்கையை நாங்கள் எடுப்போம்" என்று உறுதிசெய்து, எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதற்குப் பிறகு, ஐந்து மாதங்கள் கழித்து, 11–6–2015 அன்று இன்னொரு கடிதமும் எனக்கு வந்தது. "நீங்கள் கேட்ட அந்தக் கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும்; அதற்கான estimate தொகை 7 கோடியே 35 இலட்சம் ரூபாய்; நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது" என்ற விளக்கமும் எனக்குத் தரப்பட்டது. ஆனால், அந்தக் கடிதம் வந்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அதற்குப்பிறகு, அதற்குரிய நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது என்ற விளக்கம் இன்னும் எங்களுக்கு வந்து சேரவில்லை. எனவே, அரசுக்கு இது சம்பந்தமாக ஏதேனும் குறிப்புகள் வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால், அது தொடர்பாக என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலில் நான் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். மொத்த estimate, 68 கோடியே 65 இலட்சம் ரூபாய், total cost ஆக இப்போது இருக்கிறது. அதில் சென்னை மாநகராட்சியின் cost 10 கோடியே 75 இலட்சம் ரூபாயாகும்.

இதில் தனியார் நிலமும் இருக்கிறது. அதேபோல் Central Government நிலமும் இருக்கிறது. அதற்கு நம்முடைய State Government share–ஐக் கொடுக்க வேண்டும். அவர்கள் கொடுக்கத் தயாராக இருந்தால்— இப்போதுகூட share கொடுக்கவில்லை என்று அந்த வேலையை நாங்கள் நிறுத்தி வைக்கவில்லை. இரயில்வே துறையில் அந்தப் பணியைத் துவக்க அவர்களும் ஆயத்தமாக இருக்கிறார்கள். கூடிய விரையில் அந்தப் பிரச்சினை முடிந்து, பாலம் கட்டப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த விளக்கத்தை நான் முழுமையாக திரும்பப் படிக்க வேண்டும் என்றால், படிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்களுக்கே நான் விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். அதே பதில்தான். Estimate cost 68 கோடியே 65 இலட்சம் ரூபாய். நம்முடைய மாநகராட்சியினுடைய cost 10 கோடியே 65 இலட்சம் ரூபாயாகும். மாநகராட்சி தயாராக இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில், மாநகராட்சி தயாராக இருக்கின்றது. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு தொகுதிக்கு உட்பட்ட உண்ணாமலைக்கடை பேரூராட்சியில் விபத்து நிறைந்த விரிகோடு பகுதியில் 2014 ஆம் ஆண்டே, இரயில்வே மேம்பாலம் (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இந்தக் கேள்வி வில்லிவாக்கம் தொகுதி சம்பந்தப்பட்டதாகும். நீங்கள், உங்கள் தொகுதியைப் பற்றிக் கேட்டீர்கள் என்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் இருக்காது. இதற்கு தனிக் கேள்வி போடவும்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.எ. ஏழுமலை, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*